**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.583/2020 இ.ம.எண்.
எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2023 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ந் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி **பி.வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.ஜானகி, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துளசியம்மாள் | ஜாதி | : | |
| த/பெ | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 14.01.2020 ம் தேதி Be well மருத்துவமனையில் என்னுடைய மகன் மோகன்ராஜ் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டதற்கான விடுப்பு அறிக்கையின் நகல், அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.02.2020 ம் தேதியிட்ட கோவை ராயல்கேர் மருத்துவமனையில் என்னுடைய மகன் மோகன்ராஜ் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டதற்கான மருத்துவ அறிக்கையின் நகல், அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.02.2020 ம் தேதி என்னுடைய மகன் கோவை KMCH மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ அறிக்கையின் நகல், அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.03.2020 ம் தேதி என்னுடைய மகன் மோகன்ராஜ் ஈரோடு சுதா மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டதற்கான மருத்துவ அறிக்கையின் நகல், அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.04.2020 ம் தேதி என்னுடைய மகன் மோகன்ராஜ் ஈரோடு மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டதற்கான மருத்துவ அறிக்கையின் நகல், அசலுடன்

ஒப்பிட்டு பார்க்கப்பட்டு **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஈரோடு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் அ.வ.எண்.215/2020 வழக்கின் வழக்குரையின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஈரோடு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் அ.வ.எண்.215/2020 வழக்கின் எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(1 முதல் 5 ஆவணங்கள் வாதி தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபணை செய்யப்பட்ட காரணத்தினால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.